தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் சென்னை 6

ந.க.எண் 97239 /சி1/இ1/2012 நாள் 19.12.2012

===

பொருள் தமிழ்நாடு பள்ளிக் கல்விப்பணி– நகராட்சி/நகரிய உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் பதவி – பதவி உயர்வு மூலம் நியமனம் 01.01.2013 நிலவரப்படி தகுதி வாய்ந்தோர் பட்டியல் தயார் செய்தல்– அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களிடம் விவரங்கள் கோருதல்– சார்ந்து.

–––––

2013–2014 ஆம் கல்வி ஆண்டில் நகராட்சி நகரிய உயர்நிலைப்பள்ளிகளில் ஏற்படும் தலைமை ஆசிரியர் காலிப்பணி இடங்களை, பதவி உயர்வின் மூலம் நியமனம் செய்திடும் பொருட்டு நகராட்சி உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியராகப் பதவி உயர்வின் மூலம் நியமனம் பெறத் தகுதி வாய்ந்த பட்டதாரி மற்றும் அதனையொத்த நிலையில் பணிபுரியும் ஆசிரியர் சார்ந்த விவரங்களை, இத்துடன் இணைக்கப் பட்டுள்ள படிவத்தில், தங்கள் அதிகார வரம்பிற்குட்பட்ட அனைத்து நகராட்சி/நகரிய உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களிடம் இருந்து பெற்று விவரங்களைச் சரிபார்த்து மேலொப்பம் செய்து அவ்விவரங்கள் சார்பான தொகுப்பு அறிக்கையினையும் 22–01–2013 க்குள் இயக்குநருக்கு கிடைக்கும் வகையில் அனுப்பி வைக்குமாறு அனைத்து முதன்மை கல்வி அலுவலர்களுக்கும் தெரிவிக்கலாகிறது.

1. 31–05–1986 வரையில் நகராட்சி உயர்நிலை/மேல்நிலை பள்ளிகளில் நியமனம் பெற்ற பள்ளி உதவி ஆசிரியர்கள் மற்றும் பள்ளி உதவி ஆசிரியர் நிலையில் பணியாற்றி விடுபட்டுப்போனவர்கள்.

2. 31–05–1986 வரையில் நகராட்சி உயர்நிலை/மேல்நிலை பள்ளிகளில் நியமனம் பெற்ற முதல் நிலைத் தமிழாசிரியர்கள் (பி.எட்/பி.டி பட்டம் பெற்றவர்கள் மட்டும்)

3. 31–05–1986 வரையில் நகராட்சி உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் நியமனம் பெற்ற பள்ளி உதவி ஆசிரியர் /முதல் நிலைத் தமிழாசிரியர்கள் அப்பதவியில் இருந்து பதவி உயர்வு பெற்று, முதுகலை ஆசிரியர்களாக பணியாற்றுபவர்கள்.

4. பள்ளி உதவி ஆசிரியர் நிலையில் 31–05–1986 வரையில் நியமனம் பெற்ற உடற்கல்வி இயக்குநர் நிலை–2 / செயலக உதவியாளர் / பொறியியல் பயிற்றுநர் / விவசாய பயிற்றுநர் பணியிடங்களில் பணியாற்றுபவர்கள் பிடி / பிஎட் பட்டம் பெற்றவர்கள் மட்டும்.

5. 31–05–1986 வரையில் நகராட்சி உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் இடைநிலை ஆசிரியர்களாக நகராட்சி ஆணையரால் (Commissioner ) நியமனம் பெற்று பதவி உயர்வு மூலம் பட்டதாரி ஆசிரியர்கள்.

ஏற்கனவே நகராட்சி உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியராகப் பதவி உயர்வு வழங்கப்பட்டு பதவி உயர்வினை தற்காலிகமாக மூன்று ஆண்டுகளுக்குத் துறப்பு செய்தவர்களுள், தற்காலிகப் பணித்துறப்பு செய்த நாளிலிருந்து 31/12/2012 அன்று மூன்று ஆண்டுகாலம் முடித்தவர்கள்.

முதுகலைப்பாட ஆசிரியர்களாக நேரடி நியமனம் பெற்றவர்களின் பெயர்களை எக்காரணத்தைக் கொண்டும், இப்பட்டியலில் சேர்க்கக்கூடாது எனவும், பதவி உயர்வின் மூலம் முதுகலை ஆசிரியர்களாகப் பணியாற்றுபவர்களது விவரங்களை அனுப்புகையில் அவர்கள் பள்ளி உதவி ஆசிரியர்/முதனிலைத் தமிழாசிரியர் பதவியில்(கீழ்நிலைப்பதவி) பணிவரன் முறை செய்யப்பட்ட நாளை அடிப்படையாகக் கொண்டு பட்டியலைத் தயார் செய்வதுடன் பள்ளி உதவியாசிரியர்/முதனிலைத் தமிழாசிரியர் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளை தவறாமல் குறிப்பிட வேண்டும்.

நகராட்சி நடுநிலைப் பள்ளிகளில் இருந்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளுக்கு பட்டதாரி ஆசிரியர்களாக 31–05–1986–க்குள் ஈர்த்துக் கொள்ளப்பட்டவர்கள் சார்பான விவரங்கள் மட்டுமே அனுப்பிட வேண்டும்.

தங்கள் வருவாய் மாவட்டத்தில் நகரிய/நகராட்சி பள்ளிகள் இல்லை எனில் இன்மை அறிக்கையினை தவறாது அனுப்ப வேண்டும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதில் தனிப்பட்ட கவனம் செலுத்தி, கோரப்பட்ட விவரங்களை முழு வடிவில் குறிப்பிட்ட கால கெடுவிற்குள் தவறாமல் பணிந்தனுப்பட வேண்டும்.

மேற்கணும் விவரங்களை இணைக்கப்பட்ட படிவத்தில் எவ்வித காலதாமதமும் செய்யாமல், முன்னுரிமைப் பட்டியலுக்கு தகுதி வாய்ந்த ஆசிரியர்கள் ஒருவரது பெயரும் விடுபடவில்லை என்று சான்றளித்து அனுப்பி வைக்குமாறு அனைத்து முதன்மை கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**ஒம்/– கு.தேவராஜன்**
பள்ளிக் கல்வி இயக்குநர்

பெறுநர்

அனைத்து முதன்மை கல்வி அலுவலர்கள்

(சென்னை, நீங்கலாக)

<u>படிவம்–1</u>

நகராட்சி/நகரிய உயர்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர் பதவி உயர்விற்குத் தகுதி வாய்ந்தோர் பட்டியல் (01–01–2013 ல் உள்ளவாறு)

| | | |
|---|---|---|
| 1 | பெயர் | |
| 2 | பதவி | |
| 3 | தற்போது பணியாற்றும் பள்ளியின் முகவரி | |
| 4 | பிறந்த தேதி | |
| 5 | பள்ளி உதவியாசிரியர்/முதனிலைத் தமிழாசிரியர் பதவியில் பணிவரன் முறை செய்யப்பட்ட நாள் தகுதிகாண் பருவம் முடித்த நாள் | |
| 6 | கல்வித் தகுதி/ பாடம் / தேர்ச்சி பெற்ற ஆண்டு | |
| 7 | பட்டப்படிப்பில் பயின்ற மொழி | |
| 8 | தாய்மொழி | |
| 9 | உயர்நிலை/பட்டப்படிப்பில் தமிழ் பயின்றள்ளாரா? | |
| 10 | தமிழ் அல்லாத பிறமொழிகளில் பயின்று இருப்பின் தமிழ் இரண்டாம் மொழித் தேர்வில் தேர்ச்சி பெற்ற விவரம்(தேர்ச்சி பெற்ற ஆண்டு குறிப்பிடப்பட வேண்டும்) | |
| 11 | சிறப்பு மற்றும் துறைத் தேர்வுகளில் தேர்ச்சி பெற்றிருப்பின் அதன் விவரம் | தேர்ச்சி பெற்ற ஆண்டு<br>தேர்வு எண் விவரம் |
| | 1. மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்வு<br>2. நிர்வாக அலுவலருக்கான கணக்குத் தேர்வு அல்லது சார்நிலை அலுவலருக்கான கணக்குத் தேர்வு பாகம் I<br>3. பள்ளித்துணை ஆய்வர் தேர்வு (1,2,3, பிரிவு) | |
| 12 | கடந்த 5 ஆண்டுகளில் தண்டனை ஏதும் பெற்றிருப்பின் அதன் முழு விவரம் | |

| | | |
|---|---|---|
| 13 | ஒழுங்கு நடவடிக்கை / குற்றவியல் நடவடிக்கை ஏதேனும் தற்போது நிலுவையிலிருப்பின் அதன் விவரம் | |
| 14 | இதற்கு முன் நகராட்சி உயர்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர் பதவி உயர்வளிக்கப்பட்டு அதனை தற்காலிகத் துறப்பு செய்திருப்பின் அதன் விவரம்(தற்காலிகத் துறப்பு செய்த நாள் மற்றும் தற்காலிகத்துறப்பு ஏற்கப்பட்ட ஆணையின் எண் மற்றும் தேதியினை குறிப்பிடப்படவேண்டும்) | |
| 15 | ஆசிரியரின் பணி மாற்றம் நடவடிக்கை திருப்திகரமாக உள்ளதா? | |
| 16 | குறிப்புரை | |
| | சார்ந்த ஆசிரியரின் கையொப்பம் மற்றும் தேதி | தலைமை ஆசிரியரின் கையொப்பம் மற்றும் தேதி. |

<u>**சான்று**</u>

கலம் 1 முதல் 16 வரையில் உள்ள விவரங்களைப் பணிப்பதிவேடு மற்றும் இதர ஆவணங்களின் அடிப்படையில் சரிபார்த்து, சரியாக உள்ளதெனச் சான்று அளிக்கிறேன். தகுதி பெற்ற ஆசிரியர்களின் பெயர் எதுவும் விடுபடவில்லை என்றும் சான்று அளிக்கின்றேன்.

தலைமையாசிரியரின் கையொப்பம் (தேதியுடன்)

மாவட்டக் கல்வி அலுவலரின் கையொப்பம் (தேதியுடன்)

இப்பட்டியலில் தகுதி பெற்ற எந்த ஆசிரியரின் பெயரும் விடுபடவில்லை என்று சான்றளித்து மேலொப்பம் செய்யப்படுகிறது.

முதன்மைக் கல்வி அலுவலர்.